முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1119

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.10.2022, சனிக்கிழமை

1. பரபிரம்ம சூட்சும ராஜனே
பரமானந்த வடிவாக வந்த அரங்கனே
வரம்பல பெற்று இந்த கலியுகத்தில்
வாழும் காலமே உலகோரை வள்ளலாக்க
2. ஆக்கவே மாதர்மத்தை துவக்கி
அன்பொடு அறமோடு அன்பர்களை நேசித்து
தேக்கமின்றி ஜீவகாருண்ய சூட்சுமத்தை
தெய்வநெறியாக மக்களெல்லாம் அடையவேண்டி
3. வேண்டியே அற்புதம் நிகழ்த்துகின்ற
வேலவர் என் அவதார ஞான தேசிகனே
காலமதில் சுப்ரமணியர் யானும் உமக்கு
கண்டுரைப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 05 ம் நாள் 22.10.2022 சனிக்கிழமை)
4. ஆசிதனை அனுதினம் உந்தனுக்கு
ஆற்றல்கூட ஆறுமுகன் தொடர்ந்து உரைப்பேன்
வாசிபலம் கொண்ட அரங்கனே
வள்ளலாய் வாழுகின்ற தேசிகனே
5. ஆசிபெற்று உன் வழி தீட்சை பெற்றால்
அகிலத்தார்க்கு ஆறுமுகன் என்னருள் கிட்டும்
கிட்டுமப்பா உன் தர்மம் ஏற்று செய்து வந்தால்
குறைவின்றி அவர்களெல்லாம் ஞானவான்களாக
6. தட்டாது கலியுகத்தில் தேற நேரும்
தவராஜன் உன் ஆசி வழி உன் தவபலத்தை
தவபலத்தை வரமாக உலகோர் பெற்று
தரணியில் தனித்துவம் கொள்ள நேரும்
7. நேர்மை கொண்டு அரங்கனே கலியின் சிறந்த
ஞானி என்று மன உறுதி கொண்டு இனிதே
வருமுலகில் தொடர்ந்து வரும் மக்களுக்கு
வையகத்தில் ஆறுமுகன் என் காட்சி உறுதிஉறுதி
8. உறுதி தந்து உலகையே மாற்ற இருக்கேன்
உயர்வான அரங்கனைக் கொண்டு இந்த சத்தியத்தை
சத்தியத்தை உலகமெல்லாம் இலகுவாய் நிரப்பி சகலருக்கும் சடாட்சர சூட்சுமம் விளக்கி
பக்தி கொண்டு அரங்கனே யாவுமென பணிந்தவர்க்கு பரிபூரண ஞான சித்தி

9. சித்தி தந்து உலகினில் ஞானியாக்கி
ஜெகத்தையே ஞானயுகமாக மாற்றம் செய்து
உத்தமர்கள் மூலமாக இந்த அற்புதத்தை
உலகமாற்றமாக ஆறுமுகன் யான் அரங்கன் வழி நடத்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–